27.06.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பயிர் விளைச்சல் போட்டி: வெற்றி பெற்ற விவசாயிகளுக்கு பரிசு

பயிர் விளைச்சல் போட்டியில் வெற்றி பெற்ற விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர் பரிசு வழங்கி பாராட்டுத் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்திற்கு ஆட்சியர் த.ந.ஹரிஹரன் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் ஜி.லதா முன்னிலை வகித்தார். கூட்டத்தில், மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஆட்சியர் பரிசு வழங்கி பாராட்டுத் தெரிவித்தார். அதன்படி, நிலக்கடலை பயிர் செய்து, முதலிடம் பெற்ற வேடசந்தூர் வட்டம் உசிலம்பட்டியை சேர்ந்த மலர்கொடிக்கு ரூ.15 ஆயிரத்துக்கான காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. நல்லமநாயக்கன்பட்டியை சேர்ந்த விவசாயி கந்தசாமி 2 ஆவது இடம் பிடித்து, ரூ.10 ஆயிரத்திற்கான காசோலை மற்றும் சான்றிதழை பெற்றுக் கொண்டார். இதே போல், சோளம் பயிர் செய்து வடமதுரையை சேர்ந்த விவசாயி பழனிச்சாமி முதலிடத்தையும், அதே பகுதியைச் சேர்ந்த விவசாயி தொப்பன் 2ஆவது இடத்தையும் பிடித்தனர். முதல் பரிசுக்கு ரூ.10 ஆயிரமும், 2ஆவது பரிசுக்கு ரூ.5 ஆயிரமும் வழங்கப்பட்டது.

## ஆர்.எஸ்.மங்கலத்தில் மிளகாய் விலை ஏற்றம்: விவசாயிகள் மகிழ்ச்சி

திருவாடானை தாலுகா, ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் சுமார் 400 ஏக்கரில் மிளகாய் விவசாயம் செய்யபட்டு வருகிறது. இப்பகுதியில் விளையும் மிளகாய் மிகவும் காரமாக இருப்பதால், வெளிமாவட்டத்தில் அதிக கிராக்கி உள்ளது.

இங்கு வாரந்தோறும் சனிக்கிழமை மிளகாய் சந்தை நடைபெறுவது வழக்கம். இந்த வாரம் சனிக்கிழமை நடந்த சந்தையில், கடந்த வாரத்தை விட முதல் ரக மிளகாய் குவின்டாலுக்கு ரூ. 500 கூடுதலாக ரூ.17,500-க்கும், இரண்டாவது ரகம் ரூ.16,500-க்கு விற்றது ரூ.17,000-க்கும் விற்பனையானது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## ரூ. 2 கோடிக்கு பருத்தி ஏலம்

மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.2.24 கோடிக்கு பருத்தி ஏலம்போனது.

இந்த ஏலத்துக்கு மொத்தம் 12 ஆயிரத்து 200 பருத்தி மூட்டைகள் வரத்து இருந்தன.கரூர், திண்டுக்கல், பழனி, வேடசந்தூர், மார்க்கம்பட்டி, மகுடஞ்சாவடி, தாராபுரம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து விவசாயிகள் விற்பனைக்காக பருத்தியைக் கொண்டு வந்திருந்தனர்.

இதில், கோவை, பொள்ளாச்சி, சூலூர், அன்னூர், திருச்சி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் ஏலத்தில் கலந்துகொண்டனர். பருத்தி குவிண்டால் ரூ.4 ஆயிரத்து 700 முதல் ரூ.5 ஆயிரத்து 900 வரை ஏலம்போனது. மொத்தம் ரூ. 2 கோடியே 24 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது.

கடந்த வாரத்தைவிட குவிண்டாலுக்கு ரூ.200 வரை விலை உயர்ந்து காணப்பட்டது. தேவை அதிகரிப்பு, நூல் விலை ஏறுமுகம் போன்ற

காரணங்களால் வரும் வாரங்களில் பருத்தியின் விலை மேலும் உயரக்கூடும் என விற்பனைக் கூட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**பனம் பழம் சீசன் துவக்கம்**

பல்லடம், பொங்கலூர் பகுதிகளில் பனம் பழம் சீசன் துவங்கியுள்ளது.

பனை மரத்தில் பனங்காயை பிஞ்சில் வெட்டினால் நுங்கு ஆகிறது. ஏப்ரல், மே மாதங்கள் நுங்கு சீசன் காலம் ஆகும். தற்போது நுங்கு சீசன் முடிந்துள்ள நிலையில், பல்லடம், பொங்கலூர் பகுதிகளில் பனை மரங்களில் வெட்டாமல் விடப்பட்ட பனங்காய் முற்றி பழமாக மாறியுள்ளது. மரத்தில் இருந்து பனம் பழம் கீழே விழத் துவங்கியுள்ளது. பனை மரம் நடவு செய்ய விரும்புபவர் மற்றும் பனங்கிழங்கு உற்பத்தி செய்வோர் பனங்கொட்டைகளை சேகரிக்கத் துவங்கியுள்ளனர். பனம் பழத்தை சுட்டுச் சாப்பிட்டால் நல்ல சுவையாக இருக்கும். பனம் பழம் சாப்பிடும் பழக்கம் கிராமப்புறங்களில் குறைந்து வருகிறது. இதனால், விவசாயிகள் பனம் பழத்தை சேகரித்து தண்ணீரில் கரைத்து சத்துமிக்க பானமாக தயாரிக்கின்றனர். அதை ஆடு, மாடுகளுக்கு உணவாகக் கொடுக்கின்றனர். இதனால், கால்நடைகளுக்கு அடர் தீவனச்செலவு குறைவதுடன் தீவனப் பற்றாக்குறைக்கு தீர்வாகவும் அமைந்துள்ளது.

**தஞ்சாவூரில் ஜூன் 29-ல் கறவை மாடு வளர்ப்புப் பயிற்சி**

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகம் அருகேயுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆய்வு மையத்தில் கறவை மாடு வளர்ப்பு முதலுதவி மூலிகை மருத்துவம் குறித்த 2 நாள் பயிற்சி முகாம் ஜூன் 29-ம் தேதி தொடங்கவுள்ளது.

காலை 9 மணி முதல் நடைபெறவுள்ள இப்பயிற்சிக்கு வரும் அனைவரும் தவறாமல் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அல்லது வேறு அடையாள அட்டை கொண்டுவர வேண்டும். மேலும் விவரங்களுக்கு 98424 55833, 04362 - 204009 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என மையத் தலைவர் என். புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

**மதுக்கூர் வட்டத்தில் குறுவை இயந்திர நடவுப் பணிகள் தொடக்கம்**

மதுக்கூர் வட்டத்தில் ரூ. 42 லட்சத்தில் குறுவை இயந்திர நடவுப் பணிகள் வெள்ளிக்கிழமை தொடங்கின.

பட்டுக்கோட்டை வட்டம், மதுக்கூர் வட்டத்தில் குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தின் கீழ் இயந்திர நடவு செயலாக்கத்திற்கான பாய் நாற்றங்கால் தயாரிக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

ஏக்கருக்கு ரூ. 4 ஆயிரம் மானியமாக வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ள நிலையில், மதுக்கூர் வட்டத்தில் ரூ. 42 லட்சம் மானியத்தில் 1050 ஏக்கரில் இயந்திர நடவுப் பணிகள் தொடங்கியுள்ளன.

மதுக்கூர் வட்டார வேளாண்மைத் துறை சார்பில் சிரமேல்குடி, மோகூர், காரப்பங்காடு, நெம்மேலி, கல்யாணஓடை ஆகிய கிராமங்களில் இயந்திர நெல் நடவுக்கான பணிகள் தீவிரமடைந்துள்ளன. குறுவை சாகுபடி சிறப்புத் திட்டத்தின் கீழ் இயந்திர நடவு செய்யும் விவசாயிகள் ஆர்வமாக பாய் நாற்றங்கால் தயாரித்து வருகின்றனர். சிரமேல்குடி கிராமத்தில் விவசாயி பாப்பாதுரை வயலில் மேற்கொள்ளப்பட்டு வரும் இயந்திர நடவுப்
பணியை வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலைய மண்ணியல் விஞ்ஞானி மோகன்தாஸ் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

அப்போது, இயந்திர நடவு முறையில் பாய் நாற்றங்கால் தயாரிக்கும் தொழில் நுட்பங்கள், களைக்கருவி பயன்படுத்துவதன் பலன்கள் ஆகியன குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். தொடர்ந்து மோகூர், காரப்பங்காடு ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள பாய் நாற்றங்கால் வயல்களையும் அவர் பார்வையிட்டார். அப்போது மதுக்கூர் வேளாண் உதவி இயக்குநர் (பொ) நவீன்சேவியர், வேளாண் உதவி அலுவலர்கள் துரைராஜ், பாபி மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

மதுக்கூர் வட்டார விவசாயிகள் நெல் இயந்திர நடவு செய்து மானியம் பெறுவதற்கு தொகுதி வேளாண் உதவி அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என்று மதுக்கூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் (பொ) நவீன் சேவியர் தெரிவித்தார்.

## "மாவட்டத்தில் 38,000 ஏக்கரில் குறுவை சாகுபடி செய்ய இலக்கு'

திருவாரூர் மாவட்டத்தில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் 38,000 ஏக்கரில் சாகுபடி மேற்கொள்ளப்படவுள்ளது என்றார் தமிழக உணவுத்துறை அமைச்சர் ஆர். காமராஜ்.

நன்னிலம் அருகே சொரக்குடி ஊராட்சியில் வெள்ளிக்கிழமை குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு இடுபொருள்களை வழங்கி மேலும் அவர் பேசியது:

திருவாரூர் மாவட்டத்துக்கு குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்துக்கு ரூ.20.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விவசாயத்துக்கு 12 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கப்பட உள்ளது.

குறுவை நெல் நடவு பணிகளை உரிய காலத்தில் மேற்கொள்ளவும், பயிரை பராமரித்து குறைந்த நீரில் அதிக பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடி முறையினை பின்பற்றி மகசூலை உயர்த்தும் வகையில் நடவு இயந்திரங்களைப் பயன்படுத்தி நடவுப் பணிகள் மேற்கொள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வேளாண் பொறியியல் துறை மூலம் நடவு இயந்திரங்கள் வாடகைக்கு பெற்று தரப்படுகிறது. இயந்திரமுறையில் நெல் நடவுக்கான செலவீனம் 100 சதவீதம் மானியமாக ஏக்கருக்கு ரூ. 4000 வீதம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகிறது. காவிரி பகுதியில் குறுகிய கால பயறுவகை விதைகள் 100 சதவீதம் மானியத்திலும் உழவு மானியமாக ஏக்கருக்கு ரூ.500 வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் திருவாரூர் மாவட்டத்துக்கு 38,000 ஏக்கர் பரப்பில் நடவுப் பணி மேற் கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 6,500 ஏக்கர் இயந்திர நடவுப் பணிகள் நடைபெற்றுள்ளது. 20,000 ஏக்கர் பரப்பளவுக்கு பாய் நாற்றங்கால் விடப்பட்டு இயந்திர நடவிற்காக தயார் நிலையில் உள்ளது என்றார் காமராஜ்.

நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.கோபால், ஆட்சியர் எம். மதிவாணன், மாவட்ட வருவாய் அலுவலர் த.

மோகன்ராஜ், வேளாண்மை இணை இயக்குநர் க. மயில்வாகனன், துணை இயக்குநர் மதியழகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் நாளை விவசாயிகள் விழிப்புணர்வு விழா

வேளாண் அறிவியல் நிலையத்தில் திங்கள்கிழமை (ஜூன் 27) நடைபெற உள்ள விவசாயிகளுக்கான விழிப்புணர்வு விழாவுக்கு மாவட்ட விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் பயிர்க் காப்பீட்டு திட்டம், பருவநிலை மாற்றத்துக்கு உகந்த வேளாண் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய மாபெரும் விழிப்புணர்வு விழா திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் பயிர்க் காப்பீட்டு திட்டம் குறித்த முழுமையான தகவல்களை வங்கியாளர்கள் தெரிவிக்க உள்ளனர். பருவ நிலைக்கேற்ற சிறுதானிய சாகுபடி உள்ளிட்ட தகவல்களை விரிவாக எடுத்துரைத்து செயல் விளக்கம் அளிக்க உள்ளனர். வேளாண் தொடர்பான கண்காட்சியும் நடைபெற உள்ளது.

விவசாயிகள் அனைவரும் இந்த விழிப்புணர்வு விழாவில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு திட்ட ஒருங்கிணைப்பாளர் ஷீபா அழைப்பு விடுத்துள்ளார்.

## உளுந்து பயிரைத் தாக்கும் மஞ்சள் சோகை நோய்: கட்டுப்படுத்த வேளாண்துறை ஆலோசனை

மேல்மலையனூர் வட்டாரத்தில் கோடை பருவ உளுந்து சாகுபடி செய்துள்ள விவசாயிகள், பயிரில் மஞ்சள் சோகை நோய் தாக்காமல் பார்த்துக் கொண்டால் நல்ல மகசூல் பெறலாம்.

சோகை நோயினைப் பரப்பும் வெள்ளை ஈயை கட்டுப்படுத்துவதன் மூலம் மஞ்சள் தேமல் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

அறிகுறிகள்: பொதுவாக உளுந்து பயிரை அதிகமாக தாக்கக் கூடிய நோய் இது. இளம் இலைகளில் ஆங்காங்கே மஞ்சள் நிற புள்ளிகள்

தோன்றி, இலைகள் ஒழுங்கற்று, மஞ்சள் மற்றும் பச்சை நிறத்தில் காணப்படும்.

பயிர் குட்டை வளர்ச்சியுடன் காலம் தாழ்த்தி முதிர்ச்சியடைவதால், காய்களின் உற்பத்தி குறைந்து விடும்.

கட்டுப்படுத்துதல்: நோய் எதிர்ப்பு சக்தியைத் தாக்கக்கூடிய வம்பன் - 4, வம்பன் - 5 பயிரிடுதல் வேண்டும். வரப்புப் பயிராக ஏழு வரிசையில் சோளத்தை பயிரிடல் வேண்டும்.

இமிடாகுளோபிரிட் 70 (ஜ்ள்) என்ற மருந்தை 5 மில்லி ஒரு கிலோவுக்கு என்ற அளவில் விதை நேர்த்தி செய்தல் வேண்டும். உளுந்து பயிரில் மஞ்சள் சோகை நச்சுயிரி தாக்கப்பட்ட பயிர்களை ஆரம்பித்திலேயே களைய வேண்டும்.

ரசாயன முறை: புரொபினோபாஸ் 750 மில்லி அல்லது டைமெத்தோயேட் 750 மில்லி ஒரு ஹெக்டேர் என்ற அளவில் விதைத்து 25, மற்றும் 40 நாள் தழை தெளிப்பு செய்ய வேண்டும்.

உயிரியல் முறையில் மஞ்சள் சோகை நோயைக் கட்டுப்படுத்துதல்: வெர்டிசிலியம் லெகாணி என்ற உயிரியல் பூச்சி மருந்தினை ஒரு ஹெக்டேர் 3 கிலோ அளவில் நீரில் கலந்து மாலை நேரத்தில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

இதனை விதைப்பு செய்த 20 மற்றும் 35 நாள் தழை தெளிப்பாக செய்ய வேண்டும். வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மஞ்சள் நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

வேளாண்மை உதவி இயக்குநர் மேல்மலையனூர் இரா.பெரியசாமி, அலுவலர் ஆ.ஆனந்தஜோதி, உதவி வேளாண்மை அலுவலர் ப.சக்திவேல் வளத்தி உள்ளிட்டோர் பார்வையிட்டு பரிந்துரை செய்துள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## கோடை சீசனில் ஆவின் 'ஐஸ்கிரீம்' விற்பனை உயர்வு

ஊட்டி: நீலகிரி மாவட்டத்தில், கோடை சீசனில், 'ஆவின்' ஐஸ்கிரீம் விற்பனை பல மடங்கு அதிகரித்தது.

பால், நெய், வெண்ணெய், பால்கோவா உட்பட பால் மற்றும் பால் சார்ந்த மதிப்புக் கூட்டு உணவு பதார்த்தங்களை 'ஆவின்' நிறுவனம் தயாரித்து வருகிறது. சென்னை அம்பத்துார் பால் பண்ணையில், 50க்கும் மேற்பட்ட சுவைகளில், ஐஸ்கிரீம் தயாரிக்கப்பட்டு, மாநிலம் முழுக்க விற்கப் படுகிறது.

இதில், சாக்கோ பார், கசாட்டா, ஆவின் குல்பி, ஸ்ட்ராபெர்ரி, மேங்கோ கேன்டி என, குறிப்பிட்ட சில வகைகள், குழந்தைகளின் ஆதரவை பெற்றுள்ளன.

இந்நிலையில், கடந்த ஏப்ரல், மே கோடை சீசனின் போது, ஊட்டியில் உள்ள 'ஆவின்' நிறுவனம் மூலம், 5 லட்சம் ரூபாய் மதிப்பில், ஐஸ்கிரீம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி 'ஆவின்' நிறுவன பொது மேலாளர் டோம்னிக் திவ்யநாதன் கூறியதாவது:

பிரதிவாரம் புதன் கிழமைகளில், சென்னையில் இருந்து குளிரூடப்பட்ட வாகனம் மூலம், ஐஸ்கிரீம் தருவிக்கப்பட்டு, நீலகிரியில் விற்கப்படுகிறது.

கடந்த, ஏப்ரல் மாதம், 1.50 லட்சம் ரூபாய் மதிப்பில் ஆவின் ஐஸ்கிரீம் விற்கப்பட்டது; கடந்தாண்டு (2015), ஏப்ரல் மாதம், 15 ஆயிரம் ரூபாய் அளவுக்கு மட்டுமே ஐஸ்கிரீம் விற்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் (மே), 4 லட்சத்து 41 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான ஐஸ்கிரீம் விற்கப்பட்டது; கடந்தாண்டு (2015) 35 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான ஐஸ்கிரீம் விற்கப்பட்டுள்ளது. நீலகிரிக்கு வந்து சென்ற லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் 'ஆவின்' ஐஸ்கிரீம்களை அதிகளவில் வாங்கி ருசித்துள்ளனர். இதனால், வரும் சீசனில் ஐஸ்கிரீம் விற்பனை, பல மடங்கு அதிகரிக்கும். இவ்வாறு, டோம்னிக் திவ்ய நாதன் கூறினார்.

**பருவ மழையால் சாகுபடி பணி துவக்கம் வேளாண்துறை வழிகாட்டுதல் அவசியம்**

தியாகதுருகம்: மாவட்டத்தில் பருவமழை பெய்து வரும் நிலையில் பயிர்சாகுபடிக்கு, விவசாயிகள் தயாராகி வருகின்றனர். விதை, இடுபொருள், உரம் ஆகியவை தடையின்றி கிடைக்க வேளாண்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. மாவட்டத்தில் 3.5 லட்சம் ஏக்கர் பரப்பில் நெல், 70 ஆயிரம் ஏக்கர் பரப்பில் வேர்கடலை, 1.5 லட்சம் ஏக்கர் பரப்பில் கரும்பு, 60 ஆயிரம் ஏக்கர் பரப்பில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது.

இது மட்டுமின்றி எள் 15 ஆயிரம் ஏக்கரிலும், மானாவாரி கம்பு 40 ஆயிரம் ஏக்கரிலும் பயிரிடப்படுகிறது. மஞ்சள், மக்காச்சோளம், மரவள்ளி ஆகிய பயிர்களும் சாகுபடி செய்யப்படுகிறது.

இவ்வாண்டு கோடையில் வெப்பம் அதிகமாக இருந்தபோதிலும் ஏரி, குளங்கள் நிரம்பி இருந்ததால் நீர்வளம் குறையாமல் தக்க வைக்கப்பட்டதால் விவசாயம் பாதிக்கப்படவில்லை. இந்நிலையில் தென்மேற்கு பருவமழை கடந்த 10ம் தேதி துவங்கியது. தொடர்ந்து மாலை நேரங்களில் மழை பெய்தது. கடந்த ஒரு வாரமாக மாவட்டத்தின் அனைத்து பகுதியிலும் பரவலாக மழைபெய்து வருகிறது.

மண்ணின் ஈரத்தன்மை அதிகரித்ததால் விவசாயிகள் உழவுப்பணிகளை துவக்கியுள்ளனர். தொடர்ந்து மழைபெய்தால் நீர்வளம் அதிகரிக்கும் என்பதால் நெல் சாகுபடி பரப்பு இவ்வாண்டு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இதனால் விதைப்பு மற்றும் நடவுக்கு தேவையான விதைகள், இடுபொருட்கள், உரம் உள்ளிட்டவைகளை போதுமான அளவுக்கு வழங்க வேளாண்துறையினர் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

குறிப்பாக தென்மேற்கு பருவமழை குறித்த நேரத்தில் பெய்து வருவதால் முதல்ரகமான வெள்ளை பொன்னி நெல் சாகுபடி பரப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது. அதேபோல் மானாவாரி சாகுபடிக்கு ஏற்ற சூழல் உள்ளதால் பருத்தி, கம்பு விதைப்பு பணிகளை விவசாயிகள் துவக்கியுள்ளனர்.

தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு பின்னர் பயிர் சாகுபடியை குறித்த நேரத்தில் பருவம் தவறாமல் துவக்குவதற்கு ஏதுவாக மழை பெய்துள்ளது. விவசாயிகள் பயனடையும் வகையில் ஊக்குவித்து தகுந்த ஆலோசனை வழங்கிடவும், அவர்களுக்கு தேவையான விதை, இடுபொருட்கள், உரம் தடையின்றி கிடைக்க வேளாண் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## கிணற்று பாசனம் மூலம் சோளப்பயிர்: ரங்கநாதபுரம் விவசாயிகள் ஆர்வம்

ரங்கநாதபுரம்: பருவ மழை பொய்த்துப்போனதாலும், கிணற்று நீர் மற்றும் ஆழ்குழாய் மூலம் குறைந்தளவில் தண்ணீர் எடுத்து தற்போது மாற்றுப்பயிரான சோளத்துக்கு மாறி வருகின்றனர்.

இதுகுறித்து, ரங்கநாதபுரம் விவசாயிகள் கணேசன், அமராவதி ஆகியோர் கூறியதாவது: கரூரில் இருந்து திருச்சி செல்லும் வழியில் பல்வேறு இடங்களிலும், வீரராக்கியம் பகுதியில் இருந்து பிரிந்து கட்டளை, ரங்கநாதபுரம், மேலமாயனூர், கீழமாயனூர் போன்ற கிராமங்களில் ஒரு காலத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை, நெல், வாழை, கரும்பு போன்றவை அளவுக்கு அதிகமாக விளைந்தது. தற்போது ஆற்றிலும் தண்ணீர் இல்லை. வாய்க்காலிலும் தண்ணீர் இல்லை. இதன்காரணமாக ஆங்காங்கே உள்ள கிணறுகளில் உள்ள தண்ணீர் மூலமும், அவ்வப்போது கிடைக்கும் மழைநீர் மூலம் விவசாயம் செய்து வருகிறோம். தொடர்ந்து தண்ணீர் விடும் பயிர்களான நெல், கரும்பு,

வாழை பயிரிட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். ஆகவே, கம்பு, சோளம், ராகி போன்ற பயிர்களுக்கு மாறிவிட்டோம். ஒரு மூட்டை சோளம், 100 கிலோ எடை கொண்டது, 3,000 முதல், 4,000 ரூபாய் வரை விலை போகிறது. மைசூரில் நல்ல மழை பெய்தால், நாமக்கல் மார்க்கெட்டில் இருந்து வாங்கிச் சென்று விதைப்பயிராகவும் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு அவர்கள் கூறினார்.

## பசுமைக்குடிலில் வெள்ளரி சாகுபடி; அதிகாரிகள் ஆய்வு

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டைபட்டியை சேர்ந்தவர் வெங்கடேஷ். இவர் தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுக்தபட்டு வரும் தேசியவேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மானியஉதவியுடன் பசுமைக்குடில்கள் அமைத்து வெள்ளரி சாகுபடி செய்துள்ளார். இதை கலெக்டர் (பொறுப்பு) முத்துகுமரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். வேளாண் இணை இயக்குனர் செல்வம், விற்பனைத்துறை துணை இயக்குனர் முத்துமுனியாண்டி, தோட்டக்கலை உதவி இயக்குனர் மாரிமுத்து, உதவி அலுவலர் கண்ணன் உடனிருந்தனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## அரூர் விவசாயிகளுக்கு தானியங்கள் சேமிப்பு பயிற்சி

அரூர், : அரூரில் விவசாயிகளுக்கு தானியங்கள் சேமிப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது.அரூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகளுக்கு விஞ்ஞான முறையில் தானியங்கள் சேமிப்பு குறித்த பயிற்சி நடந்தது. கோவை வேளாண்மை உதவி இயக்குநர் சாத்தப்பன் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார்.

இதில் விளைவிக்கும் தானியங்களை சந்தைப்படுத்துதல், உழவர் பாதுகாப்பு திட்டத்தினால் விவசாயிகளுக்கு ஏற்படும் நன்மைகள்,

விளைப்பொருட்களை பாதுகாத்தல், உழவர் பாதுகாப்புத்திட்டம், குளிர்பதன கிடங்கில் இருப்பு வைத்தல், அறுவடைக்கு பின் செய்நேர்த்தி தொழில்நுட்பங்கள் மற்றும் சேமிக்கும் வழி முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சியில் எடுத்துரைக்கப்பட்டது. இதில் தர்மபுரி மாவட்ட வேளாண் வணிக இயக்குநர் சந்திரசேகரன், வேளாண் வணிக அலுவலர் சுப்ரமணி, சுரேஷ்குமார், விற்பனைவாரிய பணியாளர்கள், விவசாயிகள் உள்பட கலந்து கொண்டனர்.

## குறுவை தொகுப்பு திட்டத்தில் ஏக்கருக்கு ரூ.1,400 மானியம் வேளாண்மை அதிகாரி தகவல்

திருக்காட்டுப்பள்ளி, : பூதலூர் வட்டார விவசாயிகளுக்கு குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தின்கீழ் ஏக்கருக்கு ரூ.1,400 மானியம் வழங்கப்படுகிறது.அனைத்து கிராமங்களிலும் மழை பெய்து பூமியை குளிர வைத்துள்ளது. இந்த சூழலை பயன்படுத்தி கொண்டு விவசாயிகள் வயலை உழவு செய்தால் தான் மண்ணின் நீர்பிடிப்பு தன்மை அதிகமாகும். அடுத்த மழை பெய்கிறபோது மழைநீர் வழிந்தோடாமல் நிலத்திலேயே தங்கி மண்ணுக்குள் செல்லும்.

இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயரும். வயல் முழுவதும் முளைத்திருக்கிற களை செடிகள் உழவு செய்யும்போது மண்ணுக்குள் அமுக்கப்படுவதால் மக்கி, நல்ல உரமாகி அங்ககச்சத்து அதிகரித்து நுண்ணுயிர் பெருக்கம் பன்மடங்காக உயரும். மேலும் மண்ணின் இறுக்கம் குறைந்து பொலபொலப்பு தன்மை அதிகமாகும். இதனால் நாம் விதைக்கிற விதை உழவு சாலில் விதை விதைத்தாலும் அல்லது கையால் தூவி விதை விதைத்தாலும் நன்கு முளைத்து வேர் விட்டு செழிப்பாக வளரும்.

வேர்கள் எளிதாக சென்று தனது வளர்ச்சிக்கு தேவையான நீரையும், சத்துகளையும் எடுத்து கொண்டு நன்கு வளர்ந்து கூடுதல் மகசூலை கொடுக்கும்.உழவு செய்த விவசாயிகள் பயறு- உளுந்து விதைகளை ஏக்கருக்கு 8 கிலோ வீதம் வேளாண் விரிவாக்க மையத்தில் பெற்று கொள்ளலாம். இதற்காக குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தின்கீழ் ஏக்கருக்கு ரூ.1,400 வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

இந்த ரூ.1,400ல் விதைக்கென்று ரூ.900 உழவுக்கு ரூ.500 என பிரித்து கொடுக்கப்படும். உழவுக்கென வழங்கப்படும் ரூ.500 விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். இதற்கு வங்கி புத்தகத்தின் நகல், விண்ணப்பம், உழவு செய்யும்போது எடுத்த புகைப்படம் ஆகிய ஆவணங்களை விவசாயிகள் கொடுக்க வேண்டும். எனவே பூதலூர் வட்டார வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டு விவசாயிகள் பயன்பெறலாம். இவ்வாறு பூதலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

## வத்தலக்குண்டுவில் தேங்காய் கொள்முதல் நிலையம் ஜூலை 10ம் தேதி தொடக்கம்

வத்தலக்குண்டு, : திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள 250 தென்னை விவசாயிகள் இணைந்து கடந்த ஆண்டு திண்டுக்கல் தென்னை உற்பத்தியாளர் கம்பெனியை துவக்கினர். இதன் விழா வத்தலக்குண்டுவில் நடந்தது. விழாவுக்கு தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். இயக்குநர்கள் சீனிவாசன், லிங்கையன், ஜெகதீசன், தேனிலா, பெருமாள், முகமதுஅலி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தலைவர் முருகேசன் பேசுகையில், 'கடந்த ஓராண்டில் மாவட்டத்திலுள்ள தென்னை விவசாயிகளுக்கு தென்னை நலவாரியம் மூலம் ரூ.1 கோடியே 19 லட்சம் மதிப்பிலான உரம் வழங்கப்பட்டுள்ளது. வத்தலக்குண்டுவில் தென்னை நர்சரி மற்றும் தென்னை விற்பனை நிலையம் தொடக்கப்பட்டுள்ளது. வரும் ஜூலை 10ம் தேதி வத்தலக்குண்டுவில் அமைப்பு சார்பாக நியாய விலை தேங்காய் கொள்முதல் நிலையம் தொடங்கப்படும்' என்றார்.

## பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த தட்டான் பூச்சிகளை பெருக செய்ய வேண்டும் வேளாண்துறையினர் அட்வைஸ்

ராமநாதபுரம், : பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த நெல் வயல்களில் தட்டான் பூச்கிகளை பெருக செய்ய வேண்டும் என, வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர். பயிர்களில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த, ராமநாதபுரம் வேளாண்துறை அதிகாரிகள் வழங்கியுள்ள ஆலோசனைகள் வருமாறு:பயிர்களில் பூச்சி நோய்கள் ஏற்படாமல் இருக்க வயல் மட்டத்திலிருந்து வரப்பின் ஓரத்தில் சுமார் 3ல் 1 பங்கு உயரத்தில் தட்டைப்பயிறு விதைக்க வேண்டும். இந்த தட்டைப்பயிரில் நெற்பயிரை தாக்காத அசுவினி உற்பத்தியாகும். இதனால் ஏராளமான பொறிவண்டுகள் கவரப்படும். பொறி வண்டுகள் நெற்பயிரை தாக்கும் பலவிதமான சாறு உறிஞ்சும் பூச்சிகளை தாக்கி அவற்றை உண்டு கட்டுப்படுத்தும்.

1 ஹெக்டேருக்கு 3 கிலோ தட்டைப்பயிறு விதை தேவைப்படும். வரப்புகளை வெட்டி சுத்தம் செய்ய வேண்டும். வடிகால் வசதிகளை சரி செய்து தேவையான அளவு மட்டுமே நீர்கட்ட வேண்டும். தேவைக்கு அதிகமாக நீர் கட்டும்போது, பூச்சிநோய் தாக்குதல் அதிகமாகும் அபாயம் உள்ளது.2 சதுர மீட்டருக்கு 1 குருத்து பூச்சியினுடைய முட்டைக்குவியல் காணப்பட்டால், டிரைக்கோகிரம்மா ஜப்பானிக்கும் முட்டை ஒட்டுண்ணிகள் 1 ஹெக்டேருக்கு 5 சிசி வீதம் விட வேண்டும். பூச்சிகளை கட்டுப்படுத்தக் கூடிய ஊண் விழுங்கிகளான நயாட்ஸ் எனும் தட்டான் பூச்சிகளின் இளம்பருவ பூச்சிகளை வயலில் சிறுதொட்டிகள் அல்லது குட்டைகளில் தண்ணீர் தேக்கி வைப்பதன் மூலம் இனம் பெருக செய்யலாம். தட்டான் பூச்சிகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படும் நேரத்தில் பூச்சிக் கொல்லிகளை தெளிக்கக்கூடாது.

புகையான் பூச்சிகளை கட்டுப்படுத்தக் கூடிய மைரிட் எனும் விழுங்கிகள் இல்லாத வயல்களில் அவற்றை கொண்டுவந்து விட வேண்டும். நெல் வயல்களில் நீர் தொடர்ந்து தேங்கி நிற்கும் இடங்களில் மீன் வளர்ப்பதால் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படுகிறது. கூடுதல் வருமானமும் கிடைக்கிறது. சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த கூடிய பிவேரியா மற்றும் மெட்டாரைசியம் போன்ற பூஞ்சாளங்களை உபயோகிக்கலாம். விளக்குப்

பொறிகளை அமைத்தும் நோய் பூச்சிகளை அழிக்கலாம். விவசாயிகள் இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ, வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அணுகலாம். இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

**கோடைமழை எதிரொலி பூத்து குலுங்கிய முந்திரி பூக்கள் உதிர்ந்ததால் விளைச்சல் "அவுட்"**

மானாமதுரை, : கோடைமழை எதிரொலியாக முந்திரி மரங்களில் பூ, பிஞ்சுகள் உதிர்ந்து போனதால் முந்திரி விளைச்சல் கேள்விக்குறியானது. இதனால் விவசாயிகள், குத்தகைதாரர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். மானாமதுரை பகுதியில் சிப்காட், தம்பிளிக்கான், கொன்னக்குளம், மாங்குளம், சன்னதிபுதுக்குளம், நவத்தாவு, செய்யாலூர் உள்ளிட்ட பகுதிகள் செம்மண் வளம் நிறைந்த பகுதியாகும். குறைவான தண்ணீர் தேவை உள்ள மானாவாரி, தரிசு நிலங்களில் கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன் டேனிடா, வனத்துறை மூலம் அரசு புறம்போக்கு நிலங்களிலும், தனியார் நிலங்களிலும் முந்திரி மரங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கரில் நடப்பட்டன.

இவை ஒவ்வொரு ஆண்டும் அரசுக்கும், தனியார் நிலங்களில் உள்ளவை குத்தகைதாரர்களுக்கும் நல்ல வருமானத்தை தந்து வந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக எதிர்பார்த்த மழை இல்லாததால் முந்திரி விளைச்சல் கடும் சரிவை சந்தித்தது. இதனால் குத்தகை எடுத்தவர்களும், விவசாயிகளும் நஷ்டமடைந்தனர். ஒரு சில இடங்களில் முந்திரி மரங்களை அப்புறப்படுத்தி விட்டு அந்த இடங்களில் சப்போட்டா மரங்களை நடத் துவங்கினர்.அதே போல இந்தாண்டும் முந்திரி மரங்களில் பூத்த பூக்கள் சுட்டெரிக்கும் வெயிலில் கருகின. மேலும் திடீர் மே மாத இறுதியில் பெய்த கோடைமழையில் பிஞ்சுகள் உதிர்ந்து விட்டன.

இந்நிலையில் கடந்தமாதம் பெய்த மழையால் கண்மாய், குளங்களில் தண்ணீர் தேங்கியதாலும், நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்ததாலும் முந்திரி மரங்கள் பசுமையாக காட்சியளிக்கின்றன. ஆனால் பூ, பிஞ்சுகள் இன்றி

பசுமையாக இருப்பதால் இனி அடுத்த ஆண்டுதான் முந்திரி பலன்தரும் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து விவசாயிகள், குத்தகைதாரர்கள் கூறுகையில், " கடந்த இரண்டு ஆண்டுகளாக முந்திரி விளைச்சல் இல்லை. ஒவ்வொரு ஆண்டும் பருவ மழையின்போது இளம்தளிர்கள் துளிர்த்து நல்லவெயில் காலத்தில் முந்திரி காய்க்க துவங்கும். இந்தாண்டு பிஞ்சுகள் அதிகம் தென்பட்ட நேரத்தில் திடீர்மழை காரணமாக அனைத்தும் உதிர்ந்துவிட்டன. முந்திரி விளைச்சல் நன்றாக இருக்கும் என்று நினைத்த நேரத்தில் கடும்வெயில், திடீர் மழை காரணமாக முந்திரி மரங்களின் காய்ப்பு திறன் போய்விட்டது. இனி அடுத்த ஆண்டு தான் காய்க்கும்" என்றனர்.

## காய்களைக் காக்க "கருவாடு" வையுங்க! வேளாண் விஞ்ஞானிகள் ஆலோசனை

காரைக்குடி, : புடலங்காய் மற்றும் பாகற்காய்களில் பழ ஈக்களைக் கட்டுப்படுத்த கருவாட்டை பயன்படுத்தலாம் என செட்டிநாடு மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர். காரைக்குடி அருகே சாக்கோட்டை ஒன்றியத்துக்குட்பட்ட பெரியகோட்டை, மித்ராவயல், சிறுகப்பட்டி உள்பட பல்வேறு பகுதிகளில் தோட்டக்கலை பயிர்களான வெண்டை, கத்தரி, புடலங்காய் மற்றும் பாகற்காய் உள்பட பல்வேறு பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதில் புடலங்காய் மற்றும் பாகற்காய்களில் பூச்சி தாக்குதல் ஏற்பட்டு வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதனை கட்டுப்படுத்தும் விதம் குறித்து செட்டிநாடு மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளதாவது: புடலங்காய் மற்றும் பாகற்காய்களில் செம்பழுப்பு நிற உடல் கொண்ட பழ ஈ, காய்களின் மீது வெண்ணிற முட்டைகளை பிஞ்சு காய்களில் சொருகி வைக்கும். இந்த புழுக்கள் காய்களின் உட்பகுதியில் உள்ள திசுக்களை சாப்பிடும். காய்களிலிருந்து பழுப்பு நிறத்திரவம் வடிந்து, காய்கள் உருக்குலைந்து காணப்படும். தவிர காய்கள் முதிர்ச்சி அடைவதற்கு முன்பாக உதிர்ந்து விடும்.

இதனை கட்டுப்படுத்த, அழுகிய காய்களை பறித்து அழித்து விட வேண்டும். இலையின் அடியில் சேரும் ஈக்களை கார்பிரில் 1 சதவீதம் தெளித்து அழிக்கலாம். பாலித்தின் பையில் 5 கிராம் கருவாடு மற்று 0.1 மில்லி டைகுளோர்வாஸ் வைத்து பைகளில் 6 துளையிட்டு பொறியாக பயன்படுத்தலாம். இதனை ஒரு ஹெக்டேருக்கு 5 வைக்க வேண்டும். இதன் மூலம் ஈக்களை அழிக்கலாம். ஒவ்வொரு வாரமும் டைகுளோர்வாஸ் சேர்க்க வேண்டும். 20 நாட்களுக்கு ஒரு முறை கருவாட்டை மாற்ற வேண்டும். காய்முதிர்ச்சி மற்றும் அறுவடை நேரங்களில் பூச்சிக்கொல்லி உபயோகிப்பதை தவிர்க்க வேண்டும் என்றனர்.

**குமரியில் சின்னவெங்காயம் விலை உயர்வு**

நாகர்கோவில், : நாகர்கோவிலில் உள்ள கோட்டார் மார்க்கெட்டிற்கு வெளி மாவட்டம், வெளி மாநிலங்களில் இருந்து உருளை, பல்லாரி, சின்ன வெங்காயம் ஆகியவை மொத்தமாக விற்பனைக்கு வருகிறது. பின்னர் அங்கிருந்து மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கு சில்லரை விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. கோட்டார் மார்க்கெட்டில் மொத்த விலைக்கு பல்லாரி ரூ16க்கு விற்பனையாகிறது. ஆனால் சில்லரை விலையில் ரூ20 முதல் ரூ22 வரை விற்பனையாகிறது.

உருளைக்கிழங்கு மொத்த விலைக்கு ரூ26க்கு விற்பனையாகிறது. சில்லரை விலைக்கு ரூ40க்கு விற்பனையாகிறது. இதுபோல் ரூ33க்கு மொத்த விலைக்கு விற்பனையான சின்ன ெவங்காயம் ரூ38க்கு விற்பனை செய்யப்படுகிறது. சில்லரை விலைக்கு ரூ48 முதல் ரூ50 வரை விற்பனையாகிறது. இது குறித்து கோட்டார் மார்க்கெட் சின்னவெங்காய வியாபாரி காமராஜ் கூறியதாவது: பல்லாரி மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து வருகிறது. 50 கிலோ எடை கொண்ட பல்லாரி மூடை மொத்த விலைக்கு ரூ800க்கு விற்பனையாகிறது.

உருளைக்கிழங்கு ஆக்ரா, இந்தூர் பகுதியில் இருந்து வருகிறது. 45 கிலோ எடைகொண்ட உருளை மூடை மொத்த விலைக்கு ரூ1150க்கு

விற்பனையாகிறது. சின்ன ெவங்காயம் தாராபுரத்தில் இருந்து வருகிறது. சின்னவெங்காயம் மொத்தவிலைக்கு கிலோ ரூ38க்கு விற்பனையாகிறது. சின்னவெங்காயத்தை தவிர உருளை, பல்லாரி விலை நிலையாக உள்ளது. தரமான சின்னவெங்காயம் வருவதால் சின்னவெங்காயம் விலை உயர்ந்துள்ளது என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கோவை மாவட்டத்தில் ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்கு மானியம் கலெக்டர் அறிவிப்பு**



கோவை

கோவை மாவட்ட கலெக்டர் அர்ச்சனாபட்நாயக் வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:–
ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படும் தேசிய தோட்டக் கலை இயக்கம் 2015–16 திட்டத்திற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவை சேர்ந்த விவசாயி களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ள மானிய தொகைகளின் விவரம் வருமாறு:–

டிராக்டருக்கு ரூ.75 ஆயிரம், பவர் டிரில்லருக்கு ரூ.40 ஆயிரம், வெங்காய சேமிப்பு கிடங்கிற்கு ரூ.87 ஆயிரத்து 500, பழைய தோட்டங்களை புதுப்பிக்க ரூ.20 ஆயிரம் வழங்கப்படுகிறது. எனவே, மானியம் பெற

**தென்னை மரங்களை தாக்கும் சிவப்பு கூன்வண்டுகளை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண்மைத்துறை இயக்குனர் விளக்கம்**



கிணத்துக்கடவு

தென்னை மரங்களை தாக்கும் சிவப்பு கூன்வண்டுகளை கட்டுப்படுத்துவது எப்படி? என்பது குறித்து வேளாண்மைத்துறை இயக்குனர் வடிவேல் விளக்கம் அளித்துள்ளார்.

## தென்னை விவசாயம்

கிணத்துக்கடவு பகுதியில் சொக்கனூர், கப்பளாங்கரை, சிறுகளந்தை, ஆண்டிபாளையம், குருநெல்லிபாளையம், கோதவாடி, அரசம்பாளையம், சங்கராயபுரம் ஆகிய பகுதிகளில் தென்னை விவசாயம் நடைபெற்று வருகிறது. இந்த பகுதிகளில் 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

தென்னை மரங்களில் இருந்து கிடைக்கும் தேங்காய், இளநீர் மற்றும் இதர பொருட்கள் மூலம் விவசாயிகள் வருமானம் ஈட்டி வருகிறார்கள். இதனிடையே தென்னை மரங்களை தாக்கும் நோய்களை கட்டுப்படுத்தவும் விவசாயிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

## காய்ப்பு திறன்

தற்போது தென்னை விவசாயிகளுக்கு பெரும் சவாலாக இருப்பது தென்னை மரங்களை தாக்கும் சிவப்பு கூன்வண்டு. இந்த வண்டு தென்னை மரத்தை துளையிட்டு உள்ளே சென்று 200–க்கும் மேற்பட்ட முட்டைகளை இடும். அந்த முட்டைகள் புழுவாக மாறி வண்டாக மரத்தில் தங்கி விடும்.

பின்னர் மரத்தில் இருந்து சத்துக்களை உறிஞ்ச தொடங்குவதால் தென்னை மரங்களின் காய்ப்பு திறன் குறைந்து விடும். இதனால் தேங்காய் விளைச்சல் பாதிக்கும் நிலை உள்ளது. இதை தடுக்கும் வழிமுறைகள் குறித்து வேளாண்மைத்துறை இயக்குனர் (பொறுப்பு) வடிவேல் கூறியதாவது:–

## இனக்கவர்ச்சி பொறி

தென்னை விவசாயிகளுக்கு அரசு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகிறது. தற்போது ஒரு சில பகுதிகளில் தென்னை மரங்களில் சிவப்பு கூன்வண்டுகளின் தாக்குதல் உள்ளது. இந்த வண்டுகள் தென்னை மரத்தை அழித்து விடும் தன்மை கொண்டது. எனவே அதனை கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறி வைக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை சார்பில் 50 சதவீத மானிய விலையில் இனக்கவர்ச்சி பொறி வழங்கப்படுகிறது. இந்த பொறி கோவை மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை

அலுவலகங்களிலும் கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு ஒரு இனக்கவர்ச்சி பொறி வைத்தால் தான் சிவப்பு கூன்வண்டு தாக்குதலை கட்டுப்படுத்த முடியும். இவ்வாறு அவர் கூறினார்.